


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 237

செவ்வாய்க்கிழமை
22 ஜூலை 2025

ஆடி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


### செம்மணி அகழ்வுப்பணி மீள ஆரம்பம்

# நேற்று ஒரேநாளில் மட்டும் ஏழு என்புத்தொகுதிகள்!



யாழ்ப்பாணம், ஜூலை 22

செம்மணி மனிதப்புதைகுழியின் அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று ஒரேநாளில் ஏழு என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 11

### தருவதாகக் கூறிய வயற்காணி எங்கே?

#### வவுனியாவில் மக்கள் போராட்டம்

வவுனியா, ஜூலை 22

வயற்காணி வழங்குவதாக தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி 20 வருடங்களுக்கு மேலாகியும் நிறைவேற்றப்படவில்லை என்று வலியுறுத்தி வவுனியாவில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா - செட்டிகுளம் கமநல சேவை நிலையத்துக்கு 11

### இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு; வாக்குறுதிகளை நிறைவேற்றுக!

#### அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு, புதிய அரசியலமைப்பு என்பன தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசியலமைப்பு 11

#### தமிழரின் இறையாண்மையை மீட்டால்

### அமெ.ஜனாதிபதி ட்ரம்பின் பெயரை நோபல் பரிசுக்கு பரிந்துரைப்போம்!

#### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 22

தமிழர்களின் இறையாண்மையை மீட்டெடுப்பதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் துணைநின்றால், அவருடைய பெயரை 50 இலட்சம் மக்களின் கையொப்பத்துடன் அமைதிக்கான நோபலுக்குப் பரிந்துரைப்போம் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் பின்னர் அவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

1948ஆம் ஆண்டுமுதல் 11

### ஷானியின் நியமனத்தில் நாம் தலையிடவில்லை!

#### கத்தோலிக்கத் திருச்சபை தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 22

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக ஷானி அபேசேகரவையும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனவிரத்னவையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம், பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்தார் என வெளியாகியிருந்த செய்திகளை கத்தோலிக்கத் திருச்சபை நிராகரித்துள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கத்தோலிக்க திருச் 11



### மாவிட்டபுரம் கந்தசாமிக்கு இன்று சப்பறத் திருவிழா

#### உலகிலேயே உயரமான சப்பறம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சப்பறத் திருவிழா இன்று இரவு 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சப்பறம் புதிதாக அமைக்கப்பட்டு, அதன் 11



### ஜனாதிபதி அநுரகுமாரவும் இனப்படுகொலையாளியே!

#### அருட்தந்தை சக்திவேல் காட்டம்



வவுனியா, ஜூலை 22

தற்போதைய ஜனாதிபதியும் இனப்படுகொலையாளியே. அவரின் கட்சியும் இனப்படுகொலைகளுக்கு உடந்தையாகச் செயற்பட்டது என்பதே வரலாறு - என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய 11

**முச்சந்தி முரளி**

'உலகமும் நாடும் நாங்களும் கிடக்கிற கிடையில இப்ப அவருக்கு நோபல் பரிசு இல்லாதது தான் பெரிய குறை கண்டியளோ'

### கால்பந்தாட்ட வீரரொருவர் கோல்கம்பம் வீழ்ந்து பலி

#### நாவாந்துறையில் துயரம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

கால்பந்தாட்ட வீரரொருவர், விளையாட்டில் ஈடுபட்டிருந்த வேளை, அந்தக் கோல் கம்பம் வீழ்ந்ததால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - நாவந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 11

### ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலிருந்து உடனடியாக வெளியேறிச் செல்க!

#### தையிட்டி திஸ்ஸ விகாராதிபதிக்கு வலி.வடக்கு தவிசாளர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியான ஜின்தோட்ட நந்தராம தேரரை, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் சுகிர்தன் கடிதம் அனுப்பியுள்ளார்.

தையிட்டி இறை, முத்துக்கலட்டி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 | திகதி 21.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4139 | சீட்டிழுப்பு இலக்கம் 1206 | சீட்டிழுப்பு இலக்கம் 0165 | சீட்டிழுப்பு இலக்கம் 2245 | சீட்டிழுப்பு இலக்கம் 5897 | சீட்டிழுப்பு இலக்கம் 1927 | சீட்டிழுப்பு இலக்கம் 0472 | சீட்டிழுப்பு இலக்கம் 0013 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கினம் சிம்மம் |
| | | | சுப்பர் இலக்கம் 12 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 32 37 76 80 | வெற்றி இலக்கங்கள் 04 15 25 26 | வெற்றி இலக்கங்கள் 2 0 3 7 | வெற்றி இலக்கங்கள் 40 42 53 61 | வெற்றி இலக்கங்கள் 7 7 6 7 3 9 | வெற்றி இலக்கங்கள் 15 17 26 35 | வெற்றி இலக்கங்கள் 6 7 3 9 | வெற்றி இலக்கங்கள் 02 04 23 53 |
| விசேட எழுத்து Z | | | | | விசேட எழுத்து S | | |

# நாட்டிலிருந்து வெளியேறும் அதிகளவான மருத்துவர்கள்

**கொழும்பு, ஜூலை 22**

**கடந்த மூன்று ஆண்டுகளில் நிபுணர்கள் உட்பட ஆயிரத்து 489 மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.**

அதிக எண்ணிக்கையான மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியமை சுகாதார உட்கட்டமைப்பைச் சீர்குலைத்து, நிபுணர்களின் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது என்றும், மருத்துவர்களின் வெளியேற்றத்தால் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பிரதேசங்கள் பெரிதும் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. நாட்டின் சுகாதாரப் பணியாளர்களில் தற்போது 23 ஆயிரம் மருத்துவர்கள் உள்ளனர் என்றும், அவர்களில் 2 ஆயிரத்து 800 பேர் நிபுணர்கள் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆய்வுக்காக பெறப்பட்ட தரவுகளின்படி, 2022 முதல் 2024 வரையான மூன்று ஆண்டுகளில் ஆயிரத்து 85 மருத்துவர்கள் வெளிநாடுகளில் சிறப்புப் பயிற்சிபெற்றுவருகின்றனர். அவர்களில் 2022 ஆம் ஆண்டு 477 மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். சிறப்புப் பயிற்சிபெறும் ஆயிரத்து 85 மருத்துவர்களில் 20 சதவீதம் பேர், முதுகலை சான்றிதழ்களைப் பெற்ற பின்னரும் நாடு திரும்பவில்லை என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கசூரினாக் கடற்கரையில் பரவிய தீயால் பரபரப்பு


*மரங்கள் பல நாசம்*

யாழ்ப்பாணம், ஜூலை 22

காரைநகர் கசூரினாக் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கசூரினாக்கடற்கரை, அதை அண்மித்த பகுதிகளில் உள்ள சவுக்கு மரங்கள், பனை மரங்கள், பற்றைகள் போன்றவற்றில் தீ பரவியுள்ளது. பிரதேச மக்கள், பிரதேசசபையினர், பொலிஸார், கடற்படையினர் ஆகியோர் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆயினும் பெருமளவான மரங்கள் தீயால் அழிவடைந்துள்ளன. தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-27,113)





படம்: ஐ.சிவசாந்தன்

## பாரம்பரிய முறைப்படி நடந்த காளாஞ்சி கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை கல்வியங்காட்டில் நடைபெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நடப்பட்டு, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டில்மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (எ-26,27,66)



## செம்மணிக்கு நீதிகோரி கான்பராவில் போராட்டம்

சிட்னி, ஜூலை 22

செம்மணி மனிதப்புதைகுழிப் பேரவலத்துக்கு சர்வதேச நீதிகோரி ஆஸ்திரேலியா, கான்பராவில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் இயங்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். ஆஸ்திரேலியாவிலுள்ள பன்நாட்டுத் தூதரகங்கள் மற்றும் ஐ.நா. அலுவலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது. "இலங்கையில் உள்ளகப் பொறிமுறை மீது நம்பிக்கை இல்லை. எனவே, சர்வதேச விசாரணையே உண்மையை வெளிக்கொண்டுவரும்." எனப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | வெற்றி வாரம் 0605 |
| DLB | ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 5 6 0 3 4 4 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2871 | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 29 61 64 80 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கம் 41 45 50 51 | வெற்றி வாரம் 5032 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் 03 05 52 55 | சீட்டிழுப்பு வாரம் 4583 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து N | சுப்பர் இலக்கம் 23 | வெற்றி இலக்கம் 28 37 59 65 | வெற்றி வாரம் 2047 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 34 47 55 70 | வெற்றி வாரம் 2697 |

| JAYODA DLB | | |
|---|---|---|
| திகதி 21.07.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 12 24 35 48 | வெற்றி வாரம் 2145 |

## தீயில் கருகிய புடைவையகம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

சுன்னாகத்தில் உள்ள புடைவையகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பணியாளர் கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற பின்னரே கடைக்குள் தீ பரவியுள்ளது. சுவாமிப் படத்துக்கு ஏற்றிய விளக்கில் இருந்து தீ பரவியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறக்குமதி வரி குறைப்பு பேச்சு இறுதிக்கட்டத்தில்

*அரசாங்கம் தெரிவிப்பு*



**கொழும்பு, ஜூலை 22**

**அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இறக்குமதி வரிக்குறைப்புத் தொடர்பான விவாதம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பாக அண்மையில் மெய்நிகர் சந்திப்பொன்று நடைபெற்றது என்றும், அதில் விரிவான திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது என்றும் தொழில் அமைச்சரும், பொருளாதார மேம்பாட்டுப் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இலங்கை தற்போது அமெரிக்காவுக்கான ஏற்றுமதி வரியை 30 சதவீதமாகக் குறைக்கமுடிந்துள்ளது. அதைமேலும்குறைப்பதற்காக அமெரிக்க நலன்களுக்கு இடமளித்து வர்த்தக இடைவெளியைக் குறைக்க இலங்கையும் சில சமரசங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அமெரிக்கப் பொருள்களுக்கான சுங்க வரிகளை நீக்குதல், இலங்கைக்கான இறக்குமதிகள் மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதுஎன்றும் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஊழல், மோசடி குவியும் முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 22

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 2 ஆயிரத்து 138 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த முறைப்பாடுகளில் 44 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு 31 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பாடசாலை அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், அதிகாரிகள் போன்றவர்களும் அடங்குகின்றனர் என்று இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## அஸ்வெசும மேன்முறையீடு; அவகாசம் நேற்றுடன் நிறைவு

கொழும்பு, ஜூலை 22

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்துக்கான மேன்முறையீட்டுக்கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது இரண்டாம் கட்டத்தின்கீழ் 30 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன. இந்த மேன்முறையீடுகள் பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டுக் குழுக்கள் ஊடாக மீளாய்வு செய்யப்படும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (எ-இ)




## எம்.பி.க்களின் ஓய்வூதியம் இரத்து ஜெனிவாவில் முறையிடத்திட்டம்

கொழும்பு, ஜூலை 22

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்துச்செய்யப்படுவதை எதிர்த்து ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம் என்பவற்றில் முறைப்பாடு செய்யவுள்ளது.

இது தொடர்பில் ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பிரேமசிறி மானகே தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச்செய்வதற்கு அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. இது மிகவும் நியாயமற்ற முடிவு. தங்களுக்கான மருந்துகளைப் பெறுவதற்கு ஓய்வூதியத்துக்காகக் காத்திருக்கும் வயதான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த முடிவால் சிக்கலில் சிக்குவார்கள்.

ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக்கூட ஓய்வூதியத்தால் பூர்த்தி செய்யமுடியாத நிலைமையில், ஓய்வூதியத்தை இரத்துச்செய்வதால் ஏற்படும் நிலைமைகளை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும்-என்றார். (எ-இ)

## நேருக்கு நேர் மோதி இரு பஸ்கள் விபத்து

*25 பேர் படுகாயம்*

கொழும்பு, ஜூலை 22

கேகாலை, கலிகமுவப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்ஸும், தனியார் பயணிகள் பஸ்ஸும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர். வெரகொடவில் இருந்து கேகாலை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் மற்றும் கேகாலையில் இருந்து இரத்தினபுரி நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பஸ்ஸுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் காயமடைந்தவர்கள் கேகாலை மற்றும் வரகாபொல மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் கேகாலைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)

## அஸ்கிரியபீட அனுநாயக்கர் காலமானார்

கொழும்பு, ஜூலை 22

அஸ்கிரியபீடத்தின் அனுநாயக்கர் ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் தனது 67ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார். உடல்நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இவர் உயிரிழந்துள்ளார். (எ-இ)

## இஞ்சையும் கொஞ்சம் பாருங்கோ!

சண்டைக்காலத்தில சந்திக்குச் சந்தி சென்றிப்பொயின்ற் இருந்தமாதிரி, இப்ப எல்லா இடமும் 'ஜிம்'முகள் முளைக்கத் தொடங்கிட்டுது. விடியப்பிறமும், பின்னேரமும் பெடியளும், பொம்பிளைப் பிள்ளையளும் இந்த ஜிம்முக்குப் பள்ளிக்கூடம் மாதிரி தவறாமல் போகவும் தொடங்கிட்டினம். முந்தியெண்டால் வீடு, தோட்டம் எண்டு வேலை வெட்டியள் இருக்கும். சைக்கிளில உழைக்கித்தான் உலகம் முழுக்க போய்வரவேண்டியிருக்கும். அதால உடம்பு இரும்பா இருக்கும். ஆனால் இப்ப அப்பிடி இல்லையே. அதால கட்டுடம்பு வேணுமெண்டு விரும்பிற பெடியளுக்கு இப்ப ஜிம்தான் தஞ்சம். கஞ்சா, ஹெரோய்ன், வெட்டுக்குத்து எண்டு திரியாமல் இப்பிடி உடம்பில கவனத்தை திருப்பிறதுக்கு ஜிம் போறது நல்லதுதான். ஏனெண்டால் ஜிம்முக்குப் போறவை தண்ணியடிக்கவோ, போதைப்பொருள் பாவிக்கவோ கூடாது. அதோட ஜிம்முக்கு போனால் மனதும் ஒருநிலைப்பட்டு, கேடுகெட்ட சிந்தனையளும் வராது. பெடியளை ஒழுங்கான வழிக்கு கொண்டுவாறதுக்கு ஜிம்முக்கு அனுப்பிறதும் நல்ல முறைதான்.

ஆனால் இப்ப சிக்கல் என்னெண்டால் ஜிம்காரர் சிலர், லாபம் பாக்கிறதுக்காக செய்யிற வேலையள் ஜிம்முக்குப் போய்வாறவைக்கு கெடுதியைக் கொண்டுவருகுதாம். ஒரு ஜிம் விசாலமா, காத்தோட்டத்தோட, சுத்தமா, கிருமியள் பரவாதபடி இருக்கவேணும். அங்க ஆரெண்டே தெரியாத, வேற வேற இடங்களைச் சேர்ந்தவையும் வருவினம். ஒராளுக்கு ஏதும் தொத்துவருத்தம் இருந்து அவர் பாவிச்ச கருவியை இன்னொருத்தர் பாவிச்சால் அவருக்கும் அந்த வருத்தம் தொத்தக்கூடும். அதால ஒராள் பாவிச்ச கருவியை இன்னொரு ஆள் பாவிக்கமுதல் கிருமிநீக்கம் செய்யவேணும். அதோட ஜிம்மை எப்பவும் கூட்டித் துடைச்சு துப்பரவா வைச்சிருக்கவும் வேணும். அது பாழடைஞ்ச பேய்வீடு மாதிரி தூசுமண்டலமா இருந்தால், ஜிம்முக்கு வாறவையின்ர மூச்சோட அந்தத் தூசும் உள்ளுக்க போய், சுவாசப்பிரச்சினையளைக் கொண்டந்திடும். அதை விட ஜிம்மில போய் 'வேர்க் அவுட்' செய்த வேர்வையோட இந்தத் தூசுகளும் தோலோட ஒட்டி, தோல் வருத்தங்களும் வரக்கூடும். எப்பிடி ஒரு ஒப்பிரேன் தியேட்டரை ஆஸ்பத்திரியளில வலுசுத்தமா, கிருமியள் வராதபடி பாக்கினமோ அப்பிடிக் கவனமாக ஜிம்முகளையும் பராமரிக்கவேணும்.

ஆனால் எங்கடையாக்களுக்கு காசுமட்டும் வந்தால் காணும். வேற ஒண்டையும் பற்றி அக்கறையில்லைத்தானே. அதால ஆடிக்கொருக்கா அமாவாசைக்கொருக்காத்தான் ஜிம்மைக் கூட்டித் துடைக்கினம். ஜிம்மில இருக்கிற கருவியளை கிளீன் பண்றதோ, கிருமி நீக்கம் செய்யிறதோ ஒருக்காலும் நடக்கிறேலை. அதால குளிக்கப்போய் சேறு பூசினமாதிரி, உடம்பைக் கட்டுக்கோப்பா வைக்கவெண்டு ஜிம்முக்குப் போய் வருத்தங்களை வாங்கிக் கொண்டுவாறதுதான் மிச்சம். இதுகளையெல்லாம் உந்தப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்மார் தான் சோதிச்சு, கண்காணிக்க வேணும். ஆனால் அவை பிடிக்க வேண்டியதுகளைப் பிடிக்காமல் றோட்டில கச்சான் விக்கிற ஆச்சியையும், கற்பூரம் விக்கிற பெடியளையும் தான் பிடிச்சு தங்கட வீரத்தைக் காட்டுகினமே தவிர, காட்டவேண்டிய இடங்களில தங்கட பவரைக் காட்டுறேலை. இனியாவது கொஞ்சம் அவையள் தங்கட கடைக்கண்ணை இந்த ஜிம்முகளின்ர பக்கம் திருப்புவினமோ?

இப்பிடித் தூசோடை குப்பையா இருக்கிற ஒரு ஜிம்மைப் பற்றி அங்க போற பெடியளும், பொம்பிளைப் பிள்ளையளும் மேலிடங்களுக்கு முறைப்பாடு செய்திருக்கினம். அது தெரிய வந்தவுடன் ஜிம்முக்குப் பொறுப்பா நிக்கிற ஒருத்தர், கேட்டுக் கேள்வி ஒண்டுமில்லாமல் பெடியள் எல்லாரின்ரை அட்மிசனையும் கான்சல் பண்ணிப்போட்டாராம். பொம்பிளைப் பிள்ளையளை 'நீங்கள் நடத்தை சரியில்லாத ஆக்கள்' எண்டு எல்லாருக்கும் முன்னால கேவலப்படுத்துறாராம். அதோட இந்தப் பெடியளுக்கு சப்போர்ட்டா கதைச்ச ஜிம்மில வேலை செய்யிற ஒருத்தரையும் வேலையைவிட்டு நிப்பாட்டிப் போட்டாராம். அப்பிடி அபாண்டமா பழி சுமத்தி, கொட்டமடிக்கிற இந்த ஜிம் பொறுப்பாளரின்ர வண்டவாளங்கள் எல்லாம் பட்சிக்கு ஆதாரங்களோட சிலர் அனுப்பியிருக்கினம். காலம் வரேக்க அதுகளையும் பட்சி சொல்லும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாகமுடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில்சிறு சிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும், விரைவில் சரியாகிவிடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் உண்டு. உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச்செல்லவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவுசெய்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்குப் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**தனுசு:** மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், எளிதாகச் செய்து அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிற்பகலுக்கு மேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். வாழ்க்கைத் துணைவழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

# பனைவாரக் கண்காட்சி இன்று நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

**வடமாகாண பனை எழுச்சி வாரத்தின் ஓர் அங்கமாக, வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை 'தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து 'எங்கள் வாழ்வியலில் பனை' என்ற தொனிப்பொருளில் நடத்தும் பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமைவரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 8. மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ளன.**

வடக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான நடராஜா திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நாள்நிகழ்வில்பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு செயலாளர் மு.நந்தகோபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் பி.ப 6 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# முல்லை சம்மளங்குளத்தில் விவசாயப்பாதை சீரில்லை

*விவசாயிகள் சுட்டிக்காட்டு*



முல்லைத்தீவு, ஜூலை 22

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கமநல சேவைநிலையப் பிரிவுக்குட்பட்ட, காதலியார் சம்மளங்குளம் பகுதியிலுள்ள வயல்நிலங்களுக்குச்செல்லும் 3 கிலோமீற்றர் நீளமான குருவிச்சை ஆற்றுப்பால வீதி சீரின்றிக்காணப்படுவதால் பெரும் இடர்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வீதி மிகமோசமாக சேதமடைந்து காணப்படுவதால், இங்குள்ள 300 ஏக்கர் வரையிலான விவசாயநிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் விவசாய உள்ளீடுகளை எடுத்துச்செல்வதிலும், அறுவடைக்காலத்திலும் பலத்த இடர்பாடுகளுக்குள்ளாகின்றனர். இந்த வீதியைச் சீரமைத்துத்தரவேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ச-246,26)

# சிந்து நடைக்கூத்து இன்று ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஜூலை 22

பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்மன் என வழங்கும் திருவருள்மிகு மஹாமாரி அம்பாள் ஆலய முன்றலில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு "மைந்தனைக் கழு ஏற்றிய மகராசி" என்னும் புராண சிந்து நடைக்கூத்து இடம்பெறவுள்ளது.

தம்பசிட்டி நவதுர்க்கா நாடகமன்றத்தின் அண்ணாவியார் கலாபூசணம் சோமசுந்தரம் ஜெயவசீகரனின் நெறியாள்கையில் இடம்பெறவுள்ள புராண சிந்து நடைக்கூத்துக்கு, ஆர்மோனிய கலைஞர் தயாமணி, உடுக்குக் கலைஞர் ரவிதாஸ் குழுவினர் மற்றும் பின்னணிக் குரல்வழங்குநர்களாக குகன், மன்றக் கலைஞர்கள் அணிசேர் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர். (எ-100)

# புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்துக்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக யோகராசா கனகரஞ்சினியும், செயலாளராக சிவானந்தன் ஜெனிற்றாவும், உப தலைவராக வல்லிபுரம் அமலநாயகியும், உப செயலாளராக செபஸ்டியாம் தேவியும், பொருளாளராக கதிர்காமநாதன் கோகிலவாணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன், வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களுக்கும் தனித்தனியாக மாவட்ட தலைவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-20)

# பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 22

இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வடக்கு ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையத்தில் நடைபெற்றது.

யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி தலைமையில் நடைபெற்ற குறித்த பயிற்சிப்பட்டறையில் இந்திய ஊடகவியலாளர்கள் சூம் செயலி ஊடாகவும், நேரடியாகவும் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். பயிற்சிப்பட்டறையின் முடிவில், கலந்துகொண்ட ஊடகவியலாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச-159)

# மு.சிவசிதம்பரத்தின் ஜனனதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22

உடுப்பிட்டிச் சிங்கம் என வர்ணிக்கப்படும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் பிரதி சபாநாயகருமான அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 102ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நெல்லியடிப் பேருந்துநிலையத்துக்கு முன்பாகவுள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டது.

இதில் கரவெட்டிப் பிரதேசசபைத் தவிசாளர் கு.சுரேந்திரன், உப தவிசாளர் [illegible] உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இனிமேல் கர்ணன்களுக்கு அவமானமில்லை

மகாபாரதத்தில் வருகின்ற கர்ணன் மிகச்சிறந்த கொடையாளி, அசைக்கமுடியாத வீரன், நேர்மைக்குணம் கொண்டவன், செஞ்சோற்றுக்கடனுக்காக உயிரையும் உவந்தளித்தவன். இப்படிப்பட்ட பல சிறப்புகளைக் கொண்டிருந்த கர்ணன்தான் பஞ்சபாண்டவர்களுக்கு மூத்தவனாக உயர்ந்திருக்கவேண்டியவன். ஆனால் அவனது தாயான குந்திதேவிக்கும், சூரிய பகவானுக்கும் நிகழ்ந்த சட்டபூர்வமற்ற உறவுநிலையால் அவனது வாழ்க்கையே தலைகீழாகியது. பஞ்சணையில் உறங்கவேண்டிய அந்தக் குழந்தையை குந்திதேவி பேழை ஒன்றில் வைத்து ஆற்றிலே கைவிடுகிறாள். தேரோட்டி மகனாக வளரும் கர்ணன் தன் தந்தையின் பெயரும்,குலப்பெயரும் தெரியாததால் பல இடங்களில் அவமானப்படுத்தப்படுகின்றான். ஈற்றில் அவனுக்கு துணையாக நிற்கும் துரியோதனனுக்காக தன் சகோதரர்களையே எதிர்த்துப் போர்புரிந்து உயிர்துறக்கிறான். கர்ணன் மட்டுமல்ல, இப்போதும் சட்டபூர்வமற்ற அல்லது தவறான உறவுநிலைகளால் கருவாகி பிரசவமாகும் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறிதான். பிறந்தவுடனேயே சிசுவைக் கைவிடுதல், சிசுவைக் கொன்றுபுதைத்தல், கருக்கலைப்புச் செய்தல் என்று ஏதுமறியாக் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருக்கும் நடவடிக்கைகள் கருவறை தொடங்கி பிரசவத்துக்குப் பின்னரும் தொடர்கின்றன.

அதையும் மீறி அந்தக் குழந்தைகளை அவர்களின் தாயாரே வளர்க்க முற்பட்டால், குழந்தைகளின் பிறப்பைப் பதிவுசெய்வதென்பது சீதையின் தீக்குளிப்புக்குச் சமனான நெருப்புக்கு மேல் நிற்பதுபோன்ற சகிக்கமுடியாத அவமானகரமான விடயமாக மாறிவிடும். 'உங்களின் விவாகச்சான்றிதழ் கட்டாயம் வேண்டும், குழந்தையின் தந்தை பெயர் பதிவு செய்யவேண்டும்' என்று பதிவாளர்கள் விடாப்பிடியாக நிற்பார்கள். ஏனெனில் இலங்கையின் சட்டம் அப்படி. அதைத்தானே பதிவாளர்களும் பின்பற்றுவார்கள். பதிவாளரின் இந்தக்கேள்விகளால் கூனிக்குறுகிப் போகும் தாய்மார்கள் 'இந்தக்குழந்தையை ஏன் பெற்றேன்?' என்று மனம் நொந்து போவார்கள். இந்த அவமானங்களில் இருந்தும், சமூகத்தின் வக்கிரப் பார்வையில் இருந்தும் தப்பவே சட்டபூர்வமற்ற அல்லது தவறான உறவுநிலையால் உண்டான குழந்தைகளைக் கொல்லுதல், கைவிட்டுச் செல்லுதல் என்ற இரக்கமற்ற செயல்களில் பெண்கள் மனதைக் கல்லாக்கிக்கொண்டு இறங்குகின்றனர். இந்தநிலையில்தான் மகளிர்,சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பிறப்புச் சான்றிதழ்களில் முக்கியமான இரு மாற்றங்களைச் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார். பிறப்புச் சான்றிதழில் பெற்றோரின் திருமணம் சார்ந்த கேள்வியை நீக்குதல், தந்தையின் பெயருக்கு மாற்றாக தாயின் பெயரையும் குறிப்பிட அனுமதித்தல் என்பனவே அவர் முன்மொழிந்துள்ள மாற்றங்கள்.


ஒரு குழந்தையின் பிறப்புச் சான்றிதழில் பெற்றோர் திருமணமானவர்களா? எனும் கேள்வி இடம்பெறுவது அடிப்படையிலேயே பிழை. ஒரு குழந்தையின் பிறப்புக்கு அந்தக் குழந்தை எந்தவிதமான பொறுப்பும் ஏற்காது. திருமண உறவுக்கு அப்பால் பிறக்கும் குழந்தைகள் சமூகத்தில் பல்வேறு வகையான அவமானங்களுக்கும், பாகுபாடுகளுக்கும் ஆளாகின்றனர். இந்தக் கேள்வியைச் சான்றிதழில் வைப்பது, அந்தக் குழந்தையின் பிறப்பைப் பற்றிய ஒரு தனிப்பட்ட விவரத்தை, வாழ்நாள் முழுவதும் அந்தக்குழந்தை ஏந்திச் செல்லும்படி செய்கிறது. இது அந்தப் பிள்ளையின் உளவியல் நலனைக் கடுமையாகப் பாதிக்கும். எனவே, பெற்றோர் திருமணமானவர்களா? என்ற கேள்வியை பிறப்புச் சான்றிதழிலிருந்து அகற்றுவது குழந்தையின் கண்ணியத்தைப் பாதுகாப்பதோடு, அதன் எதிர்காலத்தையும் பிரகாசமாக்கும். அடுத்ததாக, தந்தையின் பெயரைக் குறிப்பிட முடியாத சூழ்நிலைகளில் தாயின் பெயரை அல்லது தாய்வழிப் பெயரைக் குறிப்பிட அனுமதிப்பது நடைமுறைச் சிக்கலுக்கு ஒரு மனிதநேய முறையிலான தீர்வாக அமையும். திருமண உறவுக்கு அப்பால் பிறக்கும் பல குழந்தைகளுக்கு, சட்டப்படி தந்தையை அடையாளம் காணவோ அல்லது அவர் பொறுப்பேற்கவோ இயலாத நிலை உள்ளது. இதன் விளைவாக, சான்றிதழில் தந்தையின் பெயர் இடம்பெறாது போவது அல்லது தவறான தகவல் இடம்பெறுவது போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. இது குழந்தையின் அடிப்படை அடையாள ஆவணமாகிய பிறப்புச் சான்றிதழைப் பெறுவதிலேயே தடையாக உள்ளது. தாயின் பெயரைக் குறிப்பிட அனுமதிப்பது, குழந்தைக்கு ஒரு சட்டபூர்வமான அடையாளத்தை உறுதிசெய்வதோடு, நடைமுறைச் சிக்கலைத் தீர்க்கிறது. இந்த முன்மொழிவுகளுக்கு எதிராகச் சிலர் எழுப்பும் 'சமூக ஒழுக்கம் தளரும்' என்ற கோணல் வாதம், உண்மையை முற்றாகப் புறக்கணிக்கிறது. பிறப்புச் சான்றிதழில் ஒரு தகவலை நீக்குவது பெண்களின் நடத்தையை மாற்றும் என்பதை விட அபத்தம் வேறில்லை. இந்த மாற்றங்கள் சமூகத்தின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. இவை ஒரு குழந்தையின் பிறப்பை ஒரு களங்கமாகக் கருதும் பிற்போக்கு மனப்பான்மையை நீக்குவதற்கான முதற்படிகள். அத்தோடு சிசுக் கொலைகள், கைவிடப்படும் சிசுக்கள் என்ற கொடுமைகளுக்கு முடிவுகட்டவும் இந்தமாற்றம் பெருந்துணையாகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நீ கவலைகளை சுமந்து கண்ணீர் சிந்துவதைவிட, லட்சியங்களை சுமந்து இரத்தம் சிந்து. உலகம் உன்னைப் போற்றும்.

– லெனின் –



# புதிய கல்விச் சீர்திருத்தம் மாணவருக்கு மேலும் சுமை

இலங்கை ஆசிரியர் சங்கம் அதிருப்தி

**கொழும்பு, ஜூலை 22**

**அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரவுள்ள கல்விச் சீர்திருத்தங்கள் மாணவர்கள் மீது மேலும் சுமையை ஏற்படுத்தும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

கல்விச் சீர்திருத்தங்களை அரசாங்கம் உண்மையான அடிப்படையில் வடிவமைக்கவில்லை என்றும், பழைய கொள்கைகளை மாற்றியமைத்து புதியதென மக்கள் முன்வைத்துள்ளது என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. கல்வி நிர்வாகத்துடன் தொடர்புடைய ஆசிரியர் சங்கங்கள், கல்வி நிபுணர்கள் உள்ளிட்ட பங்குதாரர்களின் ஆலோசனைகள் இன்றி தன்னிச்சையாக அரசாங்கம் முடிவுகளை எடுத்துள்ளது என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)



## பொலிஸ் அதிகாரிகளுக்கு அடுத்தாண்டு சம்பள உயர்வு


கொழும்பு, ஜூலை 22

பொலிஸ் அதிகாரிகளுக்கு அடுத்த ஆண்டு சம்பள உயர்வுக்கான திருத்தங்கள் நடைபெறுகின்றன என்று பதில் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். பொலிஸ் அதிகாரிகள் மிகக் குறைந்த சம்பளத்தைப் பெறுகிறார்கள். இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக்கூட கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு புதிய சம்பள அமைப்பைத் தயாரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## நாணய மாற்றுவீதம்

கொழும்பு, ஜூலை 22

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டிருந்த நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 305.4198 ரூபாவாகவும் கொள்வனவு விலை 297.8802 ரூபாவாகவும் காணப்பட்டது. ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 411.2192 ரூபாவாகவும் மற்றும் கொள்வனவு விலை 398.1249 ரூபாவாகவும் காணப்பட்டதுடன், யூரோ ஒன்றின் விற்பனை விலை 356.5625 ரூபாவாகவும், கொள்வனவு விலை 344.5595 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ-இ)



## சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 22

கடல் கொந்தளிப்புத் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. சிலாபம் முதல் புத்தளம் வழியாக மன்னார் வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்பரப்புகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## அம்பாந்தோட்டையில் மீண்டும் உப்பு உற்பத்தி

கொழும்பு, ஜூலை 22

அம்பாந்தோட்டையில் லங்கா உப்பு நிறுவனம் 18 மாதங்களின் பின்னர் உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

இந்தமுறை 40 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகின்றது என்று லங்கா உப்புநிறுவனத்தின் தலைவர் டி.நந்தன திலக தெரிவித்துள்ளார்.

காலநிலை காரணமாக அம்பாந்தோட்டையில் உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. நேற்றுக் காலை அங்கு உப்பு உற்பத்தி மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - ஆடி 07
23.07.2025
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை பெயர் இல்லாவிடினும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்

கொழும்பு, ஜூலை 22



குழந்தை பிறந்தவுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதியும்போது பெற்றோர் திருமணம் முடித்துள்ளார்களா என்பது தற்போது கேட்கப்படுவதில்லை. தந்தையின் பெயர் இல்லாவிடினும், தாயின் குடும்பவழிப் பெயர் மற்றும் விவரங்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதியும் போது பயன்படுத்தமுடியும் என்று மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

குருணாகல் மாவத்தகமப் பகுதியில் கடந்த 17ஆம் திகதியன்று பிறந்து இரண்டு நாள்களான சிசு ஒன்று வயல்வெளியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சமூகத்துக்கு ஓர் அறிவுறுத்தலை வழங்கவேண்டிய பொறுப்பு உண்டு.

பெற்ற குழந்தையை வளர்க்கமுடியாவிடின் பிறிதொரு தரப்பினருக்கு அந்தக் குழந்தையைக் கையளிக்கும் சட்டத்திலான நிறுவனக் கட்டமைப்பு நாட்டில் உள்ளது. நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாக இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அரசியல் பேசுபொருளாகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்

## சரத் வீரசேகர தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 22**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய புலஸ்தினி மகேந்திரன் எனப்படும் சாரா ஜஸ்மின் உயிரிழந்துவிட்டார். அவர் இந்தியாவுக்குத் தப்பியோடவில்லை. நிலைமை இப்படி இருக்கையில் குறித்த சம்பவம் தற்போது அரசியலாக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், டி.என்.ஏ. பரிசோதனைக்காக முதன்முதலில் 21 மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. சாரா ஜஸ்மினின் டி.என்.ஏ. மாதிரியுடன் பொருந்தவில்லை. 11 மாதிரிகள் காலாவதியானதால் அவை மீளப் பெறப்பட்டன. இதன்போதும் முயற்சி கைகூடவில்லை.

இந்நிலையில் சாரா ஜஸ்மின் இந்தியாவுக்குச் சென்றுவிட்டார் எனக் கதை பரப்பப்பட்டது. இது உண்மைக்குப் புறம்பான தகவல் என்பது உறுதியானது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் அரசியலாக்கப்பட்டுள்ளது. யாரின் தேவைக்காக இவ்வாறு செய்யப்படுகின்றது எனத் தெரியவில்லை. சஹ்ரான் மற்றும் நௌபர் மௌலவி ஆகியோரே பிரதான சூத்திரதாரிகளாவார்கள். நிலைமை இவ்வாறு இருக்க விசாரணையைத் திசை திருப்புவதற்காகவே மக்கள் மத்தியில் மாற்றுக் கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன" - என்றார். (ச-44)



# வவுனியா வடக்கில் நில ஆக்கிரமிப்புகள்

## ரவிகரன் எம்.பி. ஆராய்வு

வவுனியா, ஜூலை 22

வவுனியா வடக்கு இலங்கைத்தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

சந்திப்பில் வவுனியா வடக்கில் அதிகரித்துள்ள பெரும்பான்மை இனத்தவர்களின் நில ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை எவ்வாறு எதிர்கொண்டு தடுத்து நிறுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டதுடன், வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ச-26,246)

# தயாசிறியை உள்வாங்கும் நடவடிக்கை எடுக்கவில்லை

## திஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவராக நியமிப்பதற்குரிய எந்தவொரு முடிவும் கட்சிக்குள் எடுக்கப்படவில்லை. அதுபற்றிக் கலந்துரையாடப்படவும் இல்லை என்று திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தயாசிறி ஜயசேகர ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அல்லர். அவர் வேறு கட்சியைச் சார்ந்தவர். கடந்த பொதுத்தேர்தலில் எமது கட்சியுடன் இணைந்து போட்டியிட்டார். அவருக்கு எமது கட்சியில் உப தலைவர் பதவி வழங்குவது பற்றிக் கட்சிக்குள் கலந்துரையாடப்படவில்லை. யோசனையும் முன்வைக்கப்படவில்லை. கட்சியின் செயற்குழுவும் இது பற்றி அவதானம் செலுத்தவில்லை.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்திக்குள் கொள்கை மற்றும் கருத்தாடல் ரீதியிலான மாற்றங்களே ஏற்படும். தலைமைத்துவப் பதவியில் மாற்றம் வராது என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

# சஜித் பதவிக்கு இரகசிய வேட்டு

கொழும்பு, ஜூலை 22

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பறித்து வேறு ஒருவரிடம் கொடுப்பதற்கான நடவடிக்கை ஒன்று இடம்பெற்றுவருவதாகவும் அதற்கான இரகசிய பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிசபைத் தேர்தல் என எல்லாத் தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி தோல்வியடைந்துள்ளது.

இந்தத் தோல்விக்கு எதிர்க்கட்சித் தலைவரே காரணம் எனக் கருதும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் பலர் தலைவரை மாற்றி வேறு ஒருவரை அதற்கு நியமிப்பதன் மூலம்தான் கட்சியை வெற்றிப்பாதையை நோக்கி நகர்த்தமுடியும் என்று நம்புகின்றனர்.

இந்த அடிப்படையில் சில நாள்களாக தயாசிறி ஜயசேகரவின் பெயர் அடிபடத் தொடங்கியுள்ளது.

அவரை எதிர்க்கட்சித் தலைவராக நிறுத்துவதற்கே பலர் விரும்புகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ச-75)




### அரசாங்க வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 22

2025 ஜனவரி முதல் மே வரையிலான 5 மாத காலப்பகுதியில் அரசாங்கத்தின் வருமானம் 1,942.36 பில்லியன் ரூபா என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் அரசாங்கத்தின் 1,619.23 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடும்போது இது 19.95 வீத அதிகமாகும். இந்தக் காலப்பகுதியில் அரசாங்க வரி வருமானம் 1,491.25 பில்லியன் ரூபாவில் இருந்து 1,802.48 பில்லியன் ரூபா வரையில் 20.87 வீதம் அதிகரித்ததே இதற்கான பிரதான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)



# ரோஹிதவின் மகள் தலைமறைவு

பாகங்களிலிருந்து இணைக்கப்பட்ட ஜீப் தொடர்பான விசாரணை தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் மகளைக் கைதுசெய்ய அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் அங்கில்லை என்று பாணந்துறை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேயின் மகன் ரசிக விதான, சந்தேகத்துக்கிடமான ஜீப்புடன் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர் ரோஹித அபேகுணவர்த்தனவின் மகளிடமிருந்து அதை வாங்கியதாகக் கூறப்பட்டது. (ச-இ)

# மன்னார் சர்வமதப் பேரவைத் தலைவராக தர்மகுமார!

மன்னார், ஜூலை 22

மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் தலைவராக மஹா.ஸ்ரீ தர்மகுமாரக் குருக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் பொதுக்கூட்ட நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சர்வமதம் சார்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டு புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்தனர். அதன்படி புதிய தலைவராக மஹா.ஸ்ரீ தர்மகுமாரக் குருக்கள் தெரிவு செய்யப்பட்டார்.

பொதுச் செயலாளராக எஸ்.ஏ. பெர்னாண்டோ, பொருளாளராக எஸ்.செசாரியஸ், உப தலைவர்களாக அருட்பணி எமில் எழில் ராஜ் அடிகளார், ஜனாப் எஸ்.ஏ. அஸீம் மௌலவி, பாஸ்டர் எஸ். பத்திநாதன், சாந்திபுர விகாராதிபதி ஆகியோரும் உப செயலாளராக ஜனாப் கே.எம். நஜீம், நிர்வாக உறுப்பினர்களாக ஜனாப் எம்.எம். சபூர் தீன், எஸ்.எஸ். இராமகிருஷ்ணன், ஜனாப் எஸ்.எச்.எம். சிஹாா் செல்வி சாந்தி கஸ்மீர் வி.செல்வ குமரன், ம.நடேசனந்தன், அருட்சகோதரி ரீட்டா குனநாயகம், ஜனாப் ரசாக் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 . 10 . 1950

மறைவு 22 . 06 . 2025

அமரர்
**சின்னத்தம்பி ரகுலேந்திரன்**
(22.07.2025)


உன்னதமாய் உங்கள்
உடனிருப்பு தொடருமென
நாம் நினைத்தோம்
ஓர் நொடிக்குள் எல்லாம்
கனவாகிக் கலைந்ததோ
பொல்லாத விதியை நினைத்து
சொல்லாத துயரம் சூழ
பாரகன்று போன உங்களுக்காய்
ஆத்ம சாந்தி வேண்டி
பிரார்த்திக்கின்றோம் இறைவனிடம்

34/3A புகையிரத நிலைய வீதி,
1ம் ஒழுங்கை, பிறவுன் வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(CS 3661) E

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 03 . 1948

மறைவு 20 . 07 . 2025

## நடராசா கனகநாயகம்
**(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)**

நடராசா கனகநாயகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20.07.2025) கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கலாநிதி அவர்களின் அன்பு கணவரும் பிரவீனா, அபிராமி, ஆதித்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தூரன், நிசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரன், முகிலன், வெண்ணிலா ஆகியோரின் அன்பு பேரனும், ஞானேஸ்வரி (ஜேர்மனி), இரத்தினம்மா (இலங்கை), வசந்தகுமாரி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலநாதன் (ஜேர்மனி), இராஜேந்திரன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பேர்லினா, வாகீசன், லகீசன், பிரம்மராஜ், ஹம்ஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், சக்ஷிகாவின் அன்பு பேரனும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் குணலிங்கம், குணமணி மற்றும் புஸ்பராணி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
**வன்னியசிங்கம் வீதி
கோண்டாவில் கிழக்கு**

**செல்வி நடராசா இரத்தினம்மா
திருமதி வசந்தகுமாரி இராஜேந்திரன்
077 115 7650**

(CS 58914) E

# பெயர் மாற்றம்

6 ஆம் வட்டாரம் கும்புறுப்பிட்டி திருகோணமலையில் வசிக்கும் பிலிப்பு பீற்றர் மேரி அனுசா ஆகிய நான் எனது பெயரை பிலிப்பு பீற்றர் மேரி அனுரா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் மேரி அனுரா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மேரி அனுரா

# ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the allowing vacancy:

➤ **Teacher - Chemistry (English/ Tamil Medium) A/L Classes**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 04th august 2025 to the address below. Only shortlisted candidates will be called for an interview.

Kindly indicate the post you are applying for at the top left hand corner of the envelope.

**The principal
St.Jhon's College
Jaffna**

# கம்மன்பில வழக்கு ஒத்திவைப்பு

போலி அதிகாரப்பத்திர உரிமம் ஒன்றைத் தயாரித்து அவுஸ்திரேலிய வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள நிறுவனத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக கொழும்பு மேல் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது. இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ். சப்புவித முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதி உத்தரவிட்டார். (எ-இ)

# INVITATION FOR BID
# PUNGUDUTIVU DEVELOPMENT FUND AND VOLUNTARY SOCIAL AND MANAGEMENT FOUNDATION

1. The President, Pungudutivu development fund and voluntary social and management foundation, on behalf of the Pungudutivu development fund and voluntary social and management foundation invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. Under Their OWN funding.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Document
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-22 to 2025-08-06** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Irrigation Engineer, Office of the Irrigation Engineer's office, Pannai road, Jaffna. **(T. P: 021-222 2288, e.mail: p_irrigationjaffna@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. During the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be addressed to the **The President, Pungudutivu development fund and voluntary social and management foundation** and delivered or sent by registered post to the Irrigation Engineer, Office of the Irrigation Engineer's office, Pannai road, Jaffna on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Meeting Hall, Irrigation Engineer's office Jaffna, Pannai road, Jaffna. as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-07-23 To 2025-08-06 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-07-30 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-08-07 |


| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NGO/Jaffna/2025/01 | Improvement to Kalliyaru scheme in Pungudutivu | 23.042 | 90 | C6 or above (Irrigation and Drainage Canals) | 5,000.00 | 300,000.00 | 20.11.2025 | 23.10.2025 |

The President,
Pungudutivu Development Fund and Voluntary
Social and Management Foundation
Main Road, 12th Ward,
Pungudutivu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 24.11.1948



இறப்பு 21.07.2025

## விமலராஜன் (கனகநாயகம் வில்லியம்)

**(முன்னாள் வட-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர், வடமாகாண விளையாட்டுத்துறை ஆலோசகர்)**

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்து விட்டேன், விசுவாசத்தை காத்துக்கொண்டேன்" [2 திமோத்தேயு 4:7]

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகநாயகம் வில்லியம் விமலராஜன் அவர்கள் கடந்த (21.07.2025) ஆம் திகதி திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் கனகநாயகம் - பியற்றிஸ் தவமலர் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான E.T. ஸ்கோட், பியற்றிஸ் செல்வமலரின் பாசமிகு மருமகனும், இவாஞ்சலின் இந்திராணி அவர்களின் அன்புமிகு கணவரும், டேவிட் ஜெயக்குமார் (குமார், திருகோணமலை), பியற்றிஸ் கிறிஷ்ஷாந்தி (Chrisho,கொழும்பு) ஆகியோரின் பாசதிகு தந்தையும், காலஞ்சென்ற R.K. Jeyarajah (உரிமையாளர் (PAN - AM Foods), அமுதசெல்வி ஜெகநாதன், ஜோன் பிறேமசந்திரன் (அவுஸ்ரேலியா) அவர்களின் பாசமிகு சகோதரனும், யெசி கிறோசியினி (திகோணமலை) டெஸ்மண்ட் பிரதீப் (Colombo) அவர்களின் பாசமிகு மாமனாரும், றோகன் அபியூத்தின் பாசமிகு அப்பப்பாவும், செல்வன் ஸ்கொட், திருமதி காந்தி ஜெயராஜ் (அவுஸ்ரேலியா), ஜீவா பிரேமச்சந்திரன் (அவுஸ்ரேலியா) காலஞ்சென்ற N.ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் ஆராதனை செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள கொட்டடி மெதடிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 922 1293**

(CS 45575) E

# சமையலாளர் தேவை

சுண்டுக்குளியில் ஆறுபேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சமையலாளர் தேவை (காலை, மதியம், இரவு நேர உணவுகள்), உணவு வழங்கப்படும்.

- ➤ வேலை நேரம் காலை 06.00 - மாலை 05.00 வரை
- ➤ வயதெல்லை - 18 - 50
- ➤ சம்பளம் நாள் ஒன்றிற்கு 2000/-
- ➤ நேர்மையாகவும் சுத்தமாகவும் இருத்தல் வேண்டும்
- ➤ தேவையின் போது வீட்டிற்கு அருகில் உள்ள கடைக்குச் சென்று பொருட்கள் வாங்குதல் வேண்டும்

ஆர்வமுள்ளவர்கள் இன்று (22.07.2025) செவ்வாய்க்கிழமை காலை 08.00 - நண்பகல் 12.00 மணிவரை தொடர்புகொள்ளவும்

**076 071 2085**


## பேச்சுக்கு ரஷ்யா தயார்!

உக்ரைனுடன் அமைதிப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு ரஷ்யா தயாராகியுள்ளது என்று ரஷ்ய அரசாங்கத்தின் பேச்சாளரான டிமிட்ரி பெஸ்கோவ் அறிவித்துள்ளார்.

(ம-இ)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சங்கரப்பிள்ளை சிவகுமார்



பிறப்பு 12.12.1971 இறப்பு 14.08.2023

(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர், கடற்தொழில் பரிசோதகர் பதில், அகில இலங்கை சமாதான நீதவான், மொழி பெயர்ப்பாளர், தமிழ் - சிங்களம், சிங்களம் - தமிழ், போதனாசிரியர், அரச கரும மொழிகள் திணைக்களம்)

திதி - அபரபட்சம் திரயோதசி

**தரணி போற்றும் தலைவனாய்
வாழ்ந்தவரே !
பாரினில் எமைத் தவிக்க விட்டு
நினைவுகள் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்றதேனோ !
வாழ்க்கை போதும் என நினைக்கும்
போது வாழ்வின் அர்த்தங்கள்
நீங்கள் என்று உனர்கின்றோம்
சென்றிடினும் ஈராண்டு எம்
சிந்தையில் உயிராய் என்றும்
வாழ்வீரே !**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## அமரர் (திருமதி) நவநீதம் ஜெகதீசன்



தூலம் 22.10.1941 சூட்சுமம் 20.07.2025

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட "மழலைகளின் தாய்", "மாதரசி", "கலையரசி", "கற்பக விருட்சம்", "சமூக ஜோதி" திருமதி நவநீதம் ஜெகதீசன் (ரோஸ் அன்றி) அவர்கள் (Founder, Nallur Siruvar Mandram, Former Head of Jaffna District - Cooperative Women Society, Former President of Social Development Foundation (NGO)]. கடந்த (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை நல்லைக் கந்தன் கழலடிகளைச் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை - ஜானகி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr. ஜெகதீசன் அவர்களின் அருமை மனைவியும், ஜெகந்தா (சூட்டி-அவுஸ்திரேலியா), ஜெய்கிஷன் (நோர்வே), ஜெய்ஹரன் (நோர்வே), ஜெய்ராம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் ஆருயிர்த் தாயாரும், சபிதா (கவிதா), தர்ஷ்மலா (நித்தா) ஆகியோரின் சீர்மிகு வளர்ப்புத் தாயாரும் ஆவார். அம்மையார் அவர்கள், பிருதிவிராஜ், மலர்விழி, எலிஸபெத், அமரர் அனுத்தமா, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவாதிகா-கஜேந்திரா, ஜெய்விஷ்ணு, லக்ஷ்மி, சஞ்சுதா, ஹரினி, ஜெய்நீதா ஆகியோரின் பாசமிகு பெயர்த்தியும், ஶ்ரீநிதி, வித்யா, ஆயிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், சிவயோகம் மற்றும் செல்வரட்ணம் (செவ்வந்தி-கனடா), குணபூஷணம் (மல்லிகா-நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவசிங்கம், சிவசுப்பிரமணியம், எஸ்.பி இராஜா - நவநீதம், இரட்ணதுரை மற்றும் தனலக்ஷ்மி நாகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அம்மையாரின் மறைவுச் செய்தியினை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றனர் குடும்பத்தினர்.

அன்னாரின் புகழுடம்பிற்கான அந்திமக் கிரியைகள் - புதன்கிழமை காலை 8மணியிலிருந்து 10மணிவரை (23/07), அவர்களின் இல்லத்தில் (363 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) நிகழவிருக்கின்றது.

அவர்தம் புகழுடம்பு, நிறைவு யாத்திரையாகச் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனக் கிரியைகள் நடைபெறவுள்ளது என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**சூட்டி:- +61 402 960 828**
**ராம்:- +61 432 796 424**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரிவிதிப்புப் பாதிப்புகளை எதிர்கொள்ள நடவடிக்கை

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22
அமெரிக்காவின் தீர்வை வரி அதிகரிப்பால் ஆடை மற்றும் இறப்பர் தொழிற்சாலைகளை வீழ்ச்சியடையாமல் பாது காக்க தேவையான நடவடிக் கைகளை அரசாங்கம் எடுக் கும் என பெருந்தோட்ட மற் றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியா ரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:-



அமெரிக்காவின் வரி அதிக ரிப்பால் அமெரிக்காவுக்கு பிரதானமாக ஏற்றுமதி செய் யும் ஆடை மற்றும் இறப்பர் உற்பத்திகளுக்கு சிறியளவில் பாதிப்பு ஏற்படும் என நாங் கள் நம்புகிறோம்.

ஆயினும் இந்தப் பாதிப்பைக் கட்டுப்படுத்திக்கொள்ள நாங் கள் பல்வேறு வழிகளில் நட வடிக்கைகளை மேற்கொண் டுள்ளோம். எமது தொழிற்சா லைகளுக்கு ஏற்படும் பாதிப்பை எவ்வாறு குறைத்து கொள்ள முடியும் என்பது தொடர்பில் நாங்கள் பல்வேறு வழிகளில் கலந்துரை யாடிவருகிறோம். இந்த வரி அதிகரிப்பால் அழுத்தங்க ளுக்கு உள்ளாகியுள்ள தொழிற்சாலைகளைப் பாது காக்கத் தேவையான நடவடிக் கைகளை நாங்கள் மேற் கொண்டு வருகிறோம் என் பதை அந்தத் துறை சார்ந் தவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றார். (எ-இ)

# சஜித்தின் பதவியைப் பறிக்கும் திட்டமில்லை

## முஜிபூர் ரஹ்மான்

கொழும்பு, ஜூலை 22
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவை அந்தப் பதவியில் இருந்து நீக்கு வதற்கு இரகசிய பேச்சுகள் முன் னெடுக்கப்பட்டுவருகின்றன என வெளி யாகும் செய்திகளை ஐக்கிய மக்கள் சக் தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜி பூர் ரஹ்மான் நிராகரித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித் ததாவது-

அவ்வாறு எவ்வித இரகசியப்பேச்சும் எங்கும் நடக்கவில்லை. அதேபோல எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற் றம் செய்வதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் ஐக்கிய மக்கள் சக்திக்கு எழவில்லை. இது பற்றி நாடாளுமன்றக் குழுவும் அவதானம் செலுத்தவில்லை. கட்சிக்குள் இப்படியான எவ்வித யோச னையும் முன்வைக்கப்படவும் இல்லை - என்றார். (எ-44)

# கல்லூரியொன்றில் வீழ்ந்தது விமானம்!

## பங்களாதேஷில் பதற்றம்

டாக்கா, ஜூலை 22
பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில், இராணுவ விமானமொன்று பாடசாலை மீது நேற்று வீழ்ந்து விபத்துக்குள்ளான தில் பலர் உயிரிழந்துள்ளனர்.

பங்களாதேஷ் விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்றே, பயிற்சி யில் ஈடுபட்டிருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்து பாடசாலை ஒன்றின் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது, விமானத்தில் இருந்தவர்கள் மற்றும் பாடசாலை வளாகத்தில் இருந்தவர்கள் என 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்த நிலையில், அவர்கள் டாக் காவில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். கட்ட இடிபாடுக ளுக்குள் மேலும் பலர் சிக்கியுள்ள நிலை யில், அவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காய மடைந்த சிலரின் நிலைமை கவலைக்கி டமாக உள்ளதால், இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத் தும் வகையில் இன்று தேசிய துக்கதினம் கடைப்பிடிக்கப்படும் என்று பங்களா தேஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன், விமானத்தின் கறுப்புப் பெட்டி பகுப்பாய்வுக்காக உட்படுத்தப்படவுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 08 . 1947



மறைவு
21 . 07 . 2025

## தில்லையம்பலம் பொன்னு

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் பொன்னு அவர்கள் கடந்த (21.07.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செல்லம் தம்பதியரின் மருமகளும், இராசாத்தி, கனகரத்தினம், செல்லம்மா, சிறிகாந்தன் ஆகியோரின் சகோதரியும், தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், ஜிந்தாயினி (பிரான்ஸ்), ஜெயகுமார் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமாரன் (பிரான்ஸ்) மற்றும் சர்மிலா (பிரான்ஸ்). ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தாவன், பிரணவன், கிருத்திகா,ஜெனோ, ஜெனிஷா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், நந்தினியின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2025) செவ்வாய்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி உரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஹருண பதவி நீக்கப்பட்டாலே நீதியான விசாரணை நடக்கும்

## வலியுறுத்துகின்றது ஐ.ம.சக்தி



கொழும்பு, ஜுலை 22

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெளிப்படையான சுயாதீன விசாரணை இடம்பெற வேண்டுமெனில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஹருண ஜயசேகர உடன் பதவி நீக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் இந்த நாட்டிலுள்ள புலனாய்வுப் பிரிவின் சிறிய குழுவொன்று தொடர்புபட்டுள்ளது என்பதை பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஹருண ஜயசேகர நாடாளுமன்றத்தில் ஏற்றுள்ளார். இந்தக் குழுவினர் யார்? அவர்கள் ஏன் இன்னும் கைது செய்யப்படாமல் உள்ளனர்?

சாய்ந்தமருதில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சாரா கொல்லப்படவில்லை என்பது ஹாதியாவின் வாக்குமூலம் ஊடாக உறுதியாகின்றது. ஹருண ஜயசேகர கிழக்குக் கட்டளைத் தளபதியாக பதவி வகிக்கும் காலப்பகுதியில்தான் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. அதனால் சஹ்ரான் குழு இருக்கும் இடத்துக்கு முதலில் வந்த இராணுவக்குழு எது என்பது ஹருண ஜயசேகரவுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அந்தக் குழுதான் சாராவை வெளியேற்றி இருக்கவேண்டும்.

சம்பவம் நடக்கும்போது ஹருண ஜயசேகர பதவியில் இருந்துள்ளார். தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அன்று எதிரணியில் இருந்தவர். அவரைப் பதவி விலகுமாறு கோர முடியாது. எனவே பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஹருண ஜயசேகர பதவிவிலகவேண்டும். அவரை விலக்காமல் சுயாதீன விசாரணையை எதிர்பார்க்க முடியாது- என்றார். (எ-44)

**பணிப்பெண் தேவை**

புற்றுநோயின் பாதிப்பிலிருந்து குணமாகும் மனைவியை வீட்டில் தங்கியிருந்து கவனிப்பதற்கு நாற்பது வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
071 847 5539

# மரண அறிவித்தல்

## செல்வி வினாசித்தம்பி மேகலாதேவி



மட்டக்குழி சென்ஜோன்ஸ் மகாவித்தியாலயம் கொழும்பு-15 ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ் / சன்மார்க்க மகாவித்தியாலயத்தின் முன்னாள் மாணவி வினாசித்தம்பி மேகலாதேவி அவர்கள் கடந்த (20-07-2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்,

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி-ரேவதி தம்பதியரின் அன்பு மகளும், பஞ்சரத்தினம் நாகேஸ்வரி, பட்டாபிராம் கமலேஸ்வரி ஆகியோரின் பெறா மகளும், கிருஸ்ணமூர்த்தி-ரஞ்சினிதேவி அவர்களின் அன்பு மருமகளும், கிரியா, காலஞ்சென்ற நீருஜா மற்றும் நிரோஜன், ரிசிகேசன், கம்சத்வனி, சசிக்குமார், ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், Dr.விஸ்ணுகோபன், ஜதுஷா, விஸ்ணுகாந்த் அவர்களின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23-07-2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

162, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 566 8522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கஜ வாகனத்தில் பேச்சி அம்மன்!

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவத்தின் நான்காம் நாள் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை வெகு சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.
பகல்பூசைவழிபாடுகளைதொடர்ந்து மாலை உற்சவத்தை முன்னிட்டு இரவு 7 மணியளவில் வசந்த மண்டபபூசை இடம்பெற்று கஜ வாகனத்தில் எழுந்தருளிய பேச்சி அம்மன் உள்வீதி, வெளி வீதி உலாவந்து அருட்காட்சியளித்தார். (ம-100)

## தருவதாகக்...

முன்பாக, மெனிக்பாம் மக்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-
2004ஆம் ஆண்டு சிதம்பரபுரம் முகாமில் இருந்து மெனிக்பாமில் நாங்கள் குடியேற்றம் செய்யப்பட்டோம். அப்போது எமக்கு குடும்பத்துக்குத் தலா ஒரு ஏக்கர் வயல் காணிகள் வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால், 21 ஆண்டுகளாகியும் இன்றுவரை அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே, எமக்கு வழங்குவதாகக் கூறப்பட்ட காணிகளை உடனடியாக வழங்கவேண்டும் - என்றனர்.
சம்பவ இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், ஆர்ப்பாட்டகாரர்களுடன் கலந்துரையாடியதுடன், விரைவில் குறித்த காணிகளைப் பெற்றுத்தருவதாக மக்களுக்கு வாக்குறுதியும் வழங்கினார். இதையடுத்து மக்கள் தங்களின் போராட்டத்தைக் கைவிட்டனர். (அ-ம-110)

## நேற்று...

அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தில் அவதானிக்கப்பட்ட மனிதப் புதைகுழி மீதான அகழ்வு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 45 நாள்களைக் கொண்ட அகழ்வுப் பணிகளின் முதல் 15 நாள்கள் நிறைவடைந்ததும், பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. இரண்டாம்கட்ட அகழ்வின் இரண்டாம் பகுதிக்கான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்தநிலையிலேயே, ஏழு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
தடயவியல் அகழ்வாய்வுத்தளம் ஒன்றிலிருந்து 4 என்புத் தொகுதிகளும், தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இரண்டிலிருந்து 3 என்புத் தொகுதிகளுமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, செம்மணி மனிதப்புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத்தொகுதிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 72ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 65 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் ஆணையாளர் மிராக் ரஹீம், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோர் நேற்றைய அகழ்வுப்பணிகளின் போது முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அமெ.ஜனாதிபதி...

சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர்களுக்கு எதிராகப் பல்வேறு அடக்குமுறைகளும் கொலைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டன. பல உலகத்தலைவர்கள் வந்து போய்விட்டார்கள். எவரும் நீதியை நிலைநாட்டவில்லை. ட்ரம்ப் மிகவும் துணிச்சலான தலைவர். தனது முடிவுகளை அவர் மிகவும் துணிச்சலாக நடைமுறைப்படுத்துகின்றார்.
அதிர்ட்ரம்பிடம் இருந்து ஒருதொலைபேசி அழைப்புவந்தால், தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். எனவே, தமிழர்களின் இறையாண்மையைமீட்டெடுக்க அவர் எங்களுடன் நின்றால், 50 இலட்சம் கையொப்பங்களைத் திரட்டி அமைதிக்கான நோபலுக்கு அவரின் பெயரைப் பரிந்துரைப்போம் - என்றனர். (அ-ம-110)

## ஷானியின்...

சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:-
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக ஷானி அபேசேகரவையும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனவிரத்னவையும் நியமிக்குமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலையிடவோ குறைந்தபட்சம் ஆலோசனைகளை வழங்கவோ இல்லை.
ஆனால், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்திய பல அதிகாரிகள், கோத்தபய ராஜபக்சவின் ஆட்சியின்போது இடமாற்றம் செய்யப்பட்டனர் என்றே கூறப்பட்டது. எனவே, அதிகாரிகள் சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை நியமனம் கோரினார் என்று வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை - என்றார். (அ-ம-44)

## ஜனாதிபதி...

அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.
அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
சிங்கள - பௌத்த பேரினவாத ஆட்சியாளர் தமிழ் இனப்படுகொலைக்கான தருணம் பார்த்திருந்து, தமிழர்களுக்கு எதிராக பௌத்த பிக்குகளையும், அடித்தட்டு சிங்கள மக்களையும் ஏவி படுகொலைகளை மேற்கொண்ட கறுப்பு ஜுலைக் கலவரங்கள் இடம்பெற்று தற்போது 42 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இன்றளவும் இனப்படுகொலைகள் நிகழவில்லை என்றும், புதைகுழிகளை அகழத்தேவையில்லை என்றும்தான் சிங்கள ஆட்சியாளர்கள் பலர் கூறுகின்றனர். அவர்கள், நீதி, நியாயம், உண்மை, பௌத்த தர்மம் என்பவற்றை சமூக புதைகுழிக்குள் தள்ளியதன் வெளிப்பாடாகவே இந்தக் கருத்துகளைப் பார்க்க வேண்டியுள்ளது.
இனப்படுகொலையின் உச்சம் 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்ததபோதும் அதில் திருப்தி கொள்ளாத சிங்களப் பேரினவாதம், தொடர்ந்தும் பல்வேறு வடிவங்களில்இனஅழிப்பைத்தொடர்ந்தே வருகின்றது. தமிழர்களைப் பொறுத்தவரை 1983ஆம் ஆண்டின் ஜுலை மட்டுமல்ல கறுப்பு. இந்த நாட்டின் அரசமைப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டம், அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் என்பவற்றோடு ஆட்சியில் அமரும் அத்தனை அரசாங்கங்களும் பேரினவாத கடும் கறுப்பே. இவர்களிடமிருந்து தமிழர்களுக்கு எந்த நீதியும் கிட்டப்போவதில்லை - என்றுள்ளது. (அ-ம-110)

## கால்பந்தாட்ட...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. செபஸ்ரியாம்பிள்ளை யுவராஜ் (வயது-30) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
விளையாட்டில் ஈடுபட்டிருந்தவேளை கோல்க்கம்பத்தில் பாய்ந்தபோது, அந்தக் கோல் கம்பம் அவருடைய நெஞ்சில் வீழ்ந்துள்ளது. இதையடுத்து, அவர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சில நிமிடங்களில் அவர் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஆக்கிரமிக்கப்...

என்னும் பகுதியில், தனக்குச் சொந்தமான ஆதனத்தை, ஜின்தோட்ட நந்தராம தேரர் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அங்கு புதிய கட்டுமானம் ஒன்றை அமைத்துவருகின்றார் என்று பொதுமகன் ஒருவர் முறைப்பாடு வழங்கியுள்ளார்.
இதையடுத்தே குறித்த பகுதிக்கு ஜின்தோட்ட நந்தராம தேரர் உரித்தாளர் என்றால் அதற்குரிய ஆவணங்களை ஒப்படைக்குமாறும், இல்லையேல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் கடிதம் அனுப்பியுள்ளார்.
அவ்வாறு வெளியேறாவிடின், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தனது கடிதத்தில் தவிசாளர் சுகிர்தன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம-26)

## மாவிட்டபுரம்...

வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த சப்பறமே உலகின் உயரமான சப்பறமாக அறியப்படுகின்றது. அது 64 அடி உயரமும், 30 அடி அகலமும், 27 அடி நீளமும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## இனப்...

இயற்றப்படும் என தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார். விரைவில் அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கூறப்பட்டது. அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றெல்லாம் உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.
ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. எனினும், புதிய அரசியலமைப்பு தொடர்பில் அவர் தற்போது ஒரு வசனம்கூட கதைப்பதில்லை. குறைந்தபட்சம் எப்போது இதற்குரிய பணி ஆரம்பமாகும், எப்போது நிறைவுபெறும் என்பது தொடர்பில்கூட கருத்துத் தெரிவிப்பதில்லை.
இதன்மூலம் நாட்டில் அரசியற் கலாசாரத்தை மாற்றுவதற்கு இருந்த வாய்ப்பை அவர் இல்லாமல் செய்து வருகின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்து அதிகாரத்தைச் சுவைத்து வருகின்றார். அதற்கு அப்பால் சென்று, அரசியலமைப்பு மறுசீரமைப்பைச் செய்வதற்கும் அவர் தயாரில்லை என்பது தெரிகின்றது.
மேற்படி உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதுள்ள சூழ்நிலையில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையை இல்லாது செய்வதற்கும், அரசியலமைப்பு சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. இது பாரதூரமான விடயமாகும். புதிய அரசியலமைப்பு எனக்கூறிவிட்டு, மக்கள் ஆணையை மீறும் வகையில் அரசாங்கத்தின் அணுகுமுறைகள் உள்ளன' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.07.2025 செவ்வாய்க்கிழமை

# வீதியோரப் பற்றைகள் அகற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
மந்திகைப் பிரதேசத்தில் வீதியோரப் பற்றைகள் பருத்தித்துறைப் பிரதேச சபையினரால் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. புலோலி சாவகச்சேரி வீதியில் நீண்டகாலமாக வீதியோரங்களில் பற்றைகள் வளர்ந்திருந்தன. இவை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபையினரால் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. (எ-110)

# மஹிந்தானந்தவுக்கு எதிராக புதிதாகக் குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஜூலை 22
சர்ச்சைக்குரிய கரம்பலகைகள் கொள்வனவு தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, லங்கா சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளின் பெர்னாண்டோ மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் மற்றுமொரு குற்றப்பத்திரிகை நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பிரதிவாதிகளான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு ஏற்கனவே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால், அடுத்த வழக்குத் தவணையில் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-இ)



# சனசமூக நிலையங்களை திறம்படுத்த வலுவூட்டல்!

## வலி. தெற்குப் பிரதேசசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22
எதிர்காலத்தில் சனசமூக நிலையங்களைத் திறம்பட இயங்க வலுவூட்டல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அபிவிருத்திப் பணிகளின்போது சனசமூகநிலையங்களுடன் இணைந்து செயற்படுவது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உபதவிசாளர் செ. உதயகுமாரன் குறிப்பிட்டுள்ளார். வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினருடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் ஆலோசிக்கப்பட்டது. திண்மக் கழிவகற்றல் பொறிமுறையில் சனசமூக நிலையங்களு டன் இணைந்து செயற்படுவது தொடர்பிலும், வீதிப் புனரமைப்பு, தெரு மின் விளக்குகளைப் பொருத்துதல் தொடர்பிலும் இணைந்து செயற்படுவது குறித்தும் ஆராயப்பட்டது. (ச-66)

# ஆடி அமாவாசை விசேட பூசை!

யாழ்ப்பாணம், ஜூலை 22
மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் ஆடி அமாவாசை சிறப்புப் பூசை வழிபாடுகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும் என்றும், தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)




# ஹைஏஸ் விபத்து: நால்வர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 22
ஹுன்னஸ்கிரிய மீமுரே வீதியின் ஹபரகெட்டியப் பகுதியில் ஹைஏஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில்காயமடைந்த மேலும் இருவர் பேராதனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஆன்மீக உரை கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மகாபாரதம் எனும் தொடர் சொற்பொழிவினை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் ஆற்றினார்.

நிகழ்வில் திருகோணமலை உதயபுரி செல்வநாயகபுரம் முத்துக் குமாரசுவாமி திருக்கோவில் ஆலய நிர்வாகத்தினரால் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளின் அறப்பணிகளைப் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

ஆலயத்தின் புதிய கட்டடக் கட்டுமானப் பணிகளுக்காக நிதியுதவிகளும், ஆலய அறநெறிப்பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவியும் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டது. (ச-66)



வவுனியா பூவரசங்குளம் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அறநெறிப்பாடசாலையில் கல்வி கற்கின்ற 30 மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை 70 ஆயிரம் ரூபா பெறு மதியான புதிய சீருடைகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கப்பட்டன. (ச-66)



ஜனா டிஜிற்றல் பிறிண்டிங் நிறுவனத்திற்கு
வேலையாட்கள் தேவை

➤ வரவேற்பாளர்
➤ உதவியாளர்
➤ வடிவமைப்பாளர்
தொடர்புகளுக்கு:
077 073 1654
077 272 9186
#256, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.

தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526
(CS/58593) J-1

Immediate Vacancies in Construction Industry
Technical officers
HNDE/ NDT or equivalent with minimum 2 years experience in Building constructions.
Location - Jaffna
Tecora Constuction Pvt Ltd
Suitable candidates please apply via following email
Email - tecoraconstruction@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.